**வேதாரண்யம் நகராட்சியின் 2018-ம் ஆண்டு ஜீன் மாதம் 29 ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு. என். ஆர். ரவிச்சந்திரன்,**
**தனி அலுவலர்.**

**பொருள் 1**

வேதாரண்யம் நகராட்சிக்கு சொந்தமான பலவகை இனங்களுக்கு 13.06.18 அன்று மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது சேதுரஸ்தா செக்பொஸ்ட் கட்டண வசூல் உரிமத்திற்கு எஸ். பழனிதுரை என்பவரிடமிருந்து ரூ. 260000/-க்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றது. மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

சேதுரஸ்தா செக்போஸ்ட் கட்டண வசூல் உரிமத்திற்கான ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 09.02.18 முதல் தொடர்ந்து 5 முறை கோரப்பட்டது. ஒருவரும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை. 31.05.2018 அன்றைய மறு ஏலத்திற்கு எஸ். பழனிதுரை என்பவர் மட்டும் டெபாசிட் செலுத்தினார். ஆனால் ஏலமோ/ஒப்பந்தப்புள்ளியோ கோரவில்லை. 13.06.18-ம் தேதிய மறு ஏலத்தில் எஸ். பழனிதுரை என்பவரால் ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

01.05.2018 முதல் நகராட்சியால் துறை வசூல் மேற்கொள்ளப்பட்டதில் சராசரியாக ரூ.31150/- வசூல் ஆகியுள்ளது. ஒரு ஆண்டுக்கு சராசரியாக ரூ.373800/-ஐ நகராட்சி பணியாளர்கள்கொண்டு வசூலிக்கப்படும்.

**துறை வசூல் செய்வதால் ஆகும் செலவினங்கள் மற்றும் நிகர லாப தொகை பின்வருமாறு: -**

| | |
|---|---|
| 01.05.18 முதல் 2 நகராட்சிப்பணியாளர்கள் துறை வசூல் மேற்கொள்பவர்களுக்கான ஊதியம் **ஆர்.குமார், பூங்காகாவலர் (23036*12)** | 274632 |
| என். நமச்சிவாயம், ஒப்பந்த பணியாளர் (6900 *12) | 82800 |
| **கூடுதல்** | 359232 |
| ரசீது புத்தகங்கள் அச்சடிப்பதற்கான செலவினம் | 5000 |
| **கூடுதல்** | **364232** |
| துறை வசூல் வசூலிக்கப்படும் தொகை ஆண்டுக்கு சராசரியாக | 373800 |
| துறை வசூல் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் | 364232 |
| **நிகர லாபம்** | **9568** |

துறை மூலமாக வசூல் செய்வதில் செலவினங்கள் நீங்கலாக நிகர லாபம் ரூ.9568/- என்ற நிலையில் ஒட்டு மொத்த வருவாய் இழப்பீடுகளை தவிர்க்கும் பொருட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.260000/-யினை ஏற்கலாம். ஏலம் கோரப்படாத மரம், குளம், ராஜாஜிபூங்கா வணிக வளாக தங்கும் அறைகள் ஆகிய இனங்களுக்கு மறு ஏலம் கோரிடலாம்.

***தீர்மான எண். 108 அனுமதிக்கப்பட்டது.***

**மன்ற பொருள் 2**

வேதாரண்யம் நகராட்சி பகுதியில் உள்ள காந்தி பூங்கா மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி (15.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு) அகஸ்தியன்பள்ளி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி (0.80 இலட்சம் லிட்டர் கொள்ளளவு) மற்றும் கைலவனம்பேட்டை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி (1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு) ஆகிய 3 இடங்களிலும் திரவ குளோரின் (Liquid Cholorine) பயன்படுத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. இந்த மூன்று இடங்களுக்கும் 1 வருடத்திற்கு தேவையான திரவ குளோரினை ஒவ்வொரு மாதமும் சப்ளை செய்ய வேண்டியுள்ளது. இதற்கு சுமார் 20,000 லிட்டர் தேவைப்படுகிறது. இதற்கான மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

***தீர்மான எண். 109 அனுமதிக்கப்பட்டது.***

**மன்றப்பொருள் 3**

வேதாரண்யம் நகராட்சியில் புதியதாக துப்புரவு பணியாளர்களுக்கு ரூ, 200.00 இலட்சம் மதிப்பீட்டில் 18 எண்ணிக்கை அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து உரிய நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, ஏற்கனவே இருந்த பழைய குடியிருப்புகள் மார்ச்-18 மாதத்தில் இடிக்கப்பட்டுள்ளது. **(ந.க. எண்.1285/17/இ1)** அக்குடியிருப்பில் குடியிருந்த கீழ்குறிப்பிட்ட துப்புரவுப்பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படவில்லை. தற்போது துப்புரவு பணியாளர்கள் குடியிருப்புகள் இடிக்கப்பட்டதால் ஏப்ரல் 2018 மாதம் முதல் தகுதியான வீட்டு வாடகைப்படி வழங்கிட மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) மற்றும் பதவி |
|---|---|
| 1. | வி. மாரியப்பன் - துப்புரவுப்பணியாளர் |
| 2. | வி. ஜெயபால் - துப்புரவுப்பணியாளர் |
| 3. | சி. பழனிச்சாமி - துப்புரவுப்பணியாளர் |
| 4. | எம். ஆனந்தன் - துப்புரவுப்பணியாளர் |
| 5. | ஆர். தர்மராஜ் - துப்புரவுப்பணியாளர் |
| 6. | வி. சுப்பிரமணியன் துப்புரவுப்பணியாளர் |
| 7. | எல். மாரியம்மாள் - துப்புரவுப்பணியாளர் |
| 8. | ஜி. கண்ணையன் - துப்புரவுப்பணியாளர் |
| 9. | வி. வீரப்பன் - துப்புரவுப்பணியாளர் |
| 10. | இ. சரஸ்வதி - துப்புரவுப்பணியாளர் |
| 11. | ஜி. கிருபாகரன் - துப்புரவுப்பணியாளர் |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**(837/18/சி1)**

***தீர்மான எண். 110 அனுமதிக்கப்பட்டது.***

**மன்றப்பொருள் 4**

வேதாரண்யம் நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா இயக்கம் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் சன்னதி கடற்கரை சாலை நுண்ணிய உரக்கிடங்கு மையம் அமைக்கும் பணி தொடர்பாக அப்பணியின் சிறப்பு அம்சங்கள் குறித்த துண்டு பிரசுரங்கள் 5000 பிரதிகள் அச்சடித்திட கீழ்க்கண்ட உள்ளுர் நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எ** | **பொருள்** | **அருணா கம்ப்யூட்டர் ஆப்செட் அச்சகம்** | **ஆர். எஸ். அச்சகம், வேதாரண்யம்** | **கவி ஆப்செட், வேதாரண்யம்.** |
|---|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மைத்திட்ட சிறப்பு அம்சங்கள் குறித்த துண்டு பிரசுரங்கள் **5000** பிரதிகள் அச்சடித்தல் | ரூ. | | |
| | | 7500/- | 8000/- | 8500/- |

அலுவலக குறிப்பு : மேற்கண்ட **3** நிறுவனங்களில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனமான "அருணா கம்பியூட்டர் ஆப்செட் அச்சகம், வேதாரண்யத்தின்" விலைப்புள்ளியினை ஏற்று துண்டு பிரசுரங்கள் அச்சடித்திடவும் அதற்கான செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. 1760/2017/இ1)**

***தீர்மான எண். 111 அனுமதிக்கப்பட்டது.***

**மன்றப்பொருள் 5**

நகராட்சி எல்லைக்குட்பட்ட சன்னதி கடற்கரையில் புதியதாக நுண்ணிய உரக்கிடங்கு அமைத்திட புல எண்.151-ல் 4.00 ஹெக்டேர் நிலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது. அவ்விடத்தில் புதிய நுண்ணிய உரக்கிடங்கு அமைக்கும் பணி துவக்கப்பட்ட நிலையில் அப்பகுதி மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. சன்னதி கடற்கரை சாலையில் புதிய நுண்ணிய உரக்கிடங்கு அமைத்திட பெறப்பட்ட இடத்தின் தாழ்வான பகுதிகளில் தேங்கிக்கிடந்த பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் குப்பைக்கழிவுகளை அப்புறப்படுத்தி சுத்தம் செய்திட மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நேராய்வின் போது தெரிவிக்கப்பட்டது. எனவே, தனியாக 10 நபர்கள் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நாள் ஒன்றிற்கு ரூ.270/- என்ற விலை விகிதத்தில் 5 நாட்கள் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

***தீர்மான எண். 112 அனுமதிக்கப்பட்டது.***

**மன்றப்பொருள் 6**

வேதாரண்யம் நகராட்சியில் I&A திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளவிருக்கும் சாலைப்பணிகள், தடுப்புசுவர் அமைக்கும் பணிக்கு கம்பி வடிவமைப்பு (Structural Design) வழங்கிட பெரியார் மணியம்மை கல்லூரிக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.**10000/-**க்கு வங்கி வரைவு எடுத்து அனுப்பிட கோரி கல்லூரியிலிருந்து கடிதம் (Project No. 47/06/2018/ Dt : 20.06.2018) வரப்பெற்றுள்ளது. எனவே இத்தொகையினை பெரியார் மணியம்மை கல்லூரி , வல்லத்திற்கு வங்கி வரைவு எடுத்து அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : **1.** மன்றம் அனுமதிக்கலாம்.
**2.** இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

***தீர்மான எண். 113 அனுமதிக்கப்பட்டது.***

**மன்றப்பொருள் 7**

வேதாரண்யம் நகராட்சி சன்னதி கடற்கரை சாலையில் நுண்ணிய உரக்கிடங்கு மையம் அமைக்கும் பணி துவங்கும்போது ஆற்காட்டுத்துறையை சார்ந்த பொதுமக்கள் சிலர் இந்த பணியை துவக்க விடாமல் மறியல் செய்து தடுத்து நிறுத்தி இடையூறு ஏற்படுத்தினார்கள். அப்பொழுது மாவட்ட ஆட்சித்தலைவர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் மற்றும் வட்டாட்சியர் அவர்களால் நேரடி ஸ்தல ஆய்வு செய்து சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படாவண்ணம் காவல்துறை பாதுகாப்புடன் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்த சம்பவங்களை வீடியோ மூலம் பதிவு செய்து மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகங்களுக்கு அனுப்பிட அறிவுறுத்தியதின் பேரில் வீடியோ பதிவுகள் எடுக்கப்பட்ட வகையில் தொகை ரூ.**7900/-** ஆகும். இச் செலவினத்தினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : **1.** மன்றம் அனுமதிக்கலாம்.
**2.** இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிருவ்து மேற்கொள்ளவும், பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு "ஸ்ரீ லெட்சுமி டிஜிட்டல் ஸ்டுடியோ & வீடியோ, வேதாரண்யத்திற்கு " தொகை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

***தீர்மான எண். 114 அனுமதிக்கப்பட்டது.***

**மன்றப்பொருள் 8**

இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு ஆண்டுசந்தா செலுத்திட தெரிவித்து வரப்பெற்ற அரசாணை எண். 157 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MAIV) நாள் : 03.11.16 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. அரசாணையில் செஞ்சிலுவை சங்கத்திற்கு நகராட்சிகளுக்கு ஆண்டிற்கு ரூ. 2500 செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளவாறு 2016 ஆண்டு முதல் ஆண்டு சந்தா நகராட்சி நிதியிலிருந்து வழங்கிட அனுமதிக்கலாம்.

***தீர்மான எண். 115 அனுமதிக்கப்பட்டது.***

**மன்றப்பொருள் 9**

தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2018–19ன்கீழ் வேதாரண்யம் நகராட்சி பகுதியில் தார் சாலைகள் அமைத்திட ரூ 500.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி இவ்வலுவலக கடித ந,க,எண்.1506/2018 இ1 நாள்.10.05.2018–ன்படி கருத்துரு அனுப்பப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க எண் 12981/2018/இ3 நாள் 27.06.2018 ல் அரசு முதன்மை செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் 12.05.2018 அன்று நடைபெற்ற TURIP 2018–19க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் வேதாரண்யம் நகராட்சிக்கு சாலைப்பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ரூ. இலட்சத்தில்)

| மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|
| 500.00 | 230.00 | 150.00 | 70.00 | 50.00 |

எனவே மேற்கண்ட நிதி ஒதுக்கிட்டின்படி கீழ்க்கண்ட விவரப்படி சாலைப்பணிகள் மேற்கொள்ள ரூ.500.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட மதிப்பீட்டை சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | வார்டு எண் | பணியின் பெயர் | சாலையின் தன்மை | சாலையின் நீளம் கி.மீட்டரில் | அகலம் | மதிப்பீடு (ரு) லட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| | | சிப்பம் -1 | | | | |
| 1 | 2, 4, 5, 5&7, 6, 9, 17 | தார்சாலைகள் அமைத்தல் மற்றும் மறுசீரமைப்பு செய்தல் - சிவன்தெற்குத்தெரு - வடக்குத்தெரு, ஆற்காட்டுத்துறை பாரதியார்தெரு, | தார் சாலை | 4.249 | 4.10 | 200.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | சுடுகாடு சாலை, கொள்ளித்தீவு ரயில்வே பாலம் முதல் ஆற்றாங்கரை சிறுபாலம் வரை , ராமகிருஷ்ணாபுரம் முதல் சின்னச்சாலை, நாகத்தோப்பு தெரு , தீயணைப்பு நிலையம் முதல் வடக்கு வடம்போக்கித்தெரு இணைப்பு சாலை, வட்டாட்சியர் அலுவலகம் பின்புறம் முதல் மேல அரண்மனைத்தோட்டம் இணைப்பு சாலை வரை, மணியன்தீவு மெயின்சாலை, அர்ச்சரக்கட்டளை சுடுகாடு சாலை | | | | |
| | | சிப்பம் -2 | | | | |
| 2 | 11, 12, 13, 14 | தார்சாலைகள் அமைத்தல் மற்றும் மறுசீரமைப்பு செய்தல் - பக்தர்குளம் முதல் மேலக்காடு வரை, கனக்கன்காடு முதல் எஸ்.கே.எஸ். சுப்பையா பள்ளி வரை, வேம்பதேவன்காடு மெயின்ரோடு முதல் முத்துப்பேட்டை சாலை வரை, கைலவனம்பேட்டை அரிசி ஆலை முதல் சுடுகாடு ரோடு வரை, டி.டி.பி ரோடு சர்வகட்டளை அய்யனார் கோயில் இணைப்பு சாலை | தார் சாலை | 4.641 | 4.10 | 200.00 |
| | | சிப்பம் -3 | | | | |
| 3 | 15, 16, 18 & 19 | தார்சாலைகள் அமைத்தல் மற்றும் மறுசீரமைப்பு செய்தல் - பக்தர்குளம் முதல் பயத்தவரன்காடு சாலை, ராஜாளிக்காடு சாலை முதல் டி.டி.பி. சாலை வரை. டி.டி.பி. சாலை முதல் செங்காத்தலை சாலை இணைப்பு சாலை, மேலமரைக்காட்டு ஈஸ்வரர் கோயில் சாலை, திருவாசக்குளம் சாலை முதல் மன்னைப்பையன்கட்டளை இணைப்பு சாலை | தார் சாலை | 2.541 | 4.10 | 100.00 |
| | | கூடுதல் | | **11.431** | | **500.00** |

அலுவலக குறிப்பு 1.மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.நகராட்சி பங்களிப்பு தொகை ரூ 50.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1506/2018 இ1

***தீர்மான எண். 116 அனுமதிக்கப்பட்டது.***

**மன்றப்பொருள் 10**

நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் **2018-19-ம்** நிதியாண்டிற்குரிய கேட்பு அறிக்கைககள் சார்வு செய்திட, கேட்பு அறிக்கைகள் நகல் எடுத்ததற்கு (Printing Charges) ஸ்ரீகாளீஸ்வரி ஆப்செட் பிரிண்டர்ஸ், நாகப்பட்டினம் நிறுவனத்திற்கு தொகை ரூ.**19819/-**யினை வழங்கிட ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : கேட்பு அறிக்கைகள் அலுவலக மென்பொருளிலிருந்து பதிவிறக்கம் செய்து நகல் எடுத்திடவும், அதற்கான செலவினங்களுக்கும் கடந்த ஆண்டுகளைப்போன்று நடப்பாண்டிலும் ஸ்ரீகாளீஸ்வரி அச்சகத்தில் நகல் எடுக்கவும் அனுமதிக்கலாம்.

***தீர்மான எண். 117 அனுமதிக்கப்பட்டது.***

ஒம்/- என்.ஆர். ரவிச்சந்திரன்
ஆணையர்/தனிஅலுவலர்,
வேதாரண்யம் நகராட்சி.